**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 02.09.2025

**அசல் வழக்கு எண்.364/2022**

**வா.சா.**1 – **சிலம்பரசன், த/பெ.குமார்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நல்லூர் கிராமத்தில் நீங்களும் மற்ற வாதிகளும் நிரந்தரமாக வசித்து வருகிறீர்களா என்றால் அங்குதான் வசித்து வருகிறோம். உங்களுக்கு முனுசாமி நாயக்கர் என்பவருக்கும் என்ன உறவு முறை என்றால் என்னுடைய தாத்தா. அப்பா வழியில் தாத்தா ஆவார். உங்கள் தாத்தா பெயரில் சர்வே எண் 40/1A ல் 26 சென்ட் இருந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தினை உங்கள் தாத்தா கிரயம் வாங்கி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் 7 சென்ட் நிலத்தை உங்களிடத்தில் தாத்தா முதல் பிரதிவாதி முருகன் அவர்களின் அப்பா வெங்கடாசலம் நாயக்கர் என்பவருக்கு கிரயம் கொடுத்த உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்களிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் உங்கள் தாத்தா வெங்கடாசலம் நாயக்கர் என்பவருக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். வெங்கடாசலம் நாயக்கர் இறந்த பிறகு அவரது மகன் முதல் பிரதிவாதி முருகன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் பாகப்பிரிவினை செய்ய போகும்போது தெரிந்து கொண்டோம். பட்டா எண் 55 தாக்கலாகி இதுனால் வரை அவர் பெயரில்தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஏற்கனவே இது சம்பந்தமாக கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனை தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. ஆகவே நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.